RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 124 | மே.10, 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# இந்திய ராணுவத்துக்கு ஆதரவு: முதல்வர் ஸ்டாலின் தலைமையில் சென்னையில் பேரணி



சென்னை: மே.10-

பாகிஸ்தானின் தீவிரவாதத் தாக்குதலுக்கு எதிராக வீரத்துடன் போர் நடத்தி வரும் இந்திய ராணுவத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக இன்று (மே.10) சென்னையில் தனது தலைமையில் பேரணி நடைபெறும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரசு செய்திக் குறிப்பில், "பாகிஸ்தானின் அத்துமீறல்களுக்கும் தீவிரவாத தாக்குதல்களுக்கும் எதிராக வீரத்துடன் போர் நடத்தி வரும் இந்திய ராணுவத்துக்கு நமது ஒன்றுபட்ட ஒற்றுமையையும் ஆதரவையும் வெளிப்படுத்த வேண்டிய தருணம் இது.

அதனை வெளிப்படுத்தும் வகையில், ஒரு பேரணியை நாளை மாலை 5 மணிக்கு சென்னையிலுள்ள காவல் துறை இயக்குநர் அலுவலகத்திலிருந்து தனது தலைமையில் முன்னாள் படைவீரர்கள், அமைச்சர்கள், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பங்குபெறும் பேரணி நடைபெறும்.

இந்த பேரணி தீவுத்திடலில் அருகே உள்ள போர் நினைவுச்சின்னம் அருகில் நிறைவு பெறும்.

இந்த பேரணி, இந்திய ராணுவத்தின் வீரத்தையும் தியாகத்தையும் அர்ப்பணிப்பையும் போற்றுவதற்கும், தேச ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கும் நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டு மக்கள் இந்தப் பேரணியில் பங்கேற்று, நமது ராணுவத்துக்கு ஆதரவு தெரிவிக்குமாறு முதல்வர் ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா பாக். போர் பதற்றம் பின்னணி: கடந்த ஏப்ரல் 22ம் தேதி காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் சுற்றுலா பயணிகள் 26 பேர் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டனர். கொடூரமான இந்தத் தாக்குதலுக்கு பதிலடியாக புதன்கிழமை நள்ளிரவில் 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் பாகிஸ்தானின் 9 பயங்கரவாத முகாம்களை அழித்தது இந்திய ராணுவம்.

அதன் தொடர்ச்சியாக, இந்திய எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டருகே உள்ள எல்லை கிராமங்களைக் குறிவைத்து பாகிஸ்தான் தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்தியாவின் 15 நகரங்களை குறிவைத்து வியாழக்கிழமை பாகிஸ்தான் மேற்கொண்ட வான்வழித் தாக்குதல் முயற்சிகளை இந்தியா முறியடித்தது. அதன் தொடர்ச்சியாக இரவிலும் பாகிஸ்தானின் ஏவுகணைகளையும், ட்ரோன்களையும் வெற்றிகரமாக வீழ்த்தியது இந்திய பாதுகாப்புப் படை.

எல்லையோர மாநிலங்களில் தொடர்ந்து பதற்றமான சூழலே நிலவுகிறது. ஜம்மு, ராஜஸ்தான், பஞ்சாப் மாநிலங்களில் உள்ள எல்லை கிராமங்களில் உச்சக்கட்ட பாதுகாப்பு அமலாகியுள்ளது. இதுபோல், தலைநகர் டெல்லியிலும் பாதுகாப்பும், கண்காணிப்பும் அதிகப்படுத்தப்பட்டுள்ளது.



## 'ஆபரேஷன் சிந்தூர்' தாக்குதல்: முன்னெச்சரிக்கையாக சென்னையில் போலீஸார் தீவிர கண்காணிப்பு

சென்னை: மே.10-

`ஆபரேஷன் சிந்தூர்' தாக்குதலை ஒட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னையில் பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் போலீஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த மாதம் காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் உயிரிழந்தனர். இச்சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. இந்த தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்திய ராணுவத்தினர் `ஆபரேஷன் சிந்தூர்' என்னும் பெயரில் நடத்திய தாக்குதலில் தீவிரவாதிகளின் 9 முகாம்கள் தகர்க்கப்பட்டன.

இதையடுத்து நாடு முழுவதும் 200 இடங்களில் போர் ஒத்திகை நடத்த திட்டமிடப்பட்டு, பல்வேறு பகுதிகளில் போர் ஒத்திகை நேற்று முன்தினம் நடைபெற்றது. இங்கு கல்பாக்கம் அணுமின் நிலையம், துறைமுகத்தில் போர் ஒத்திகை நிகழ்த்தப்பட்டது. இந்நிலையில் சென்னையின் முக்கிய பகுதிகள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காவல் துறையினர் தீவிர சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக அண்ணாசாலை, ஈவெரா பெரியார் சாலை, காமராஜர் சாலை, வணிக வளாகங்கள், மெரினா கடற்கரை, பெசன்ட் நகர் கடற்கரை, சென்ட்ரல் ரயில் நிலையம், எழும்பூர் ரயில் நிலையம், முக்கிய கோயில்கள் உட்பட பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் காவல் துறையினர் கூடாரங்கள் அமைத்து தீவிர வாகனச் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் சந்தேக நபர்கள் நடமாட்டத்தையும் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

## இந்தியா பாக். போர்ப் பதற்றம் அதிகரிப்பு: ஐபிஎல் 2025 காலவரையின்றி ஒத்திவைப்பு

புதுடெல்லி: மே.10-

இந்தியா பாகிஸ்தான் இடையேயான போர்ப் பதற்றம் தீவிரமடைந்து வருவதை அடுத்து ஐபிஎல் போட்டிகள் காலவரையின்றி ஒத்திவைப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னதாக, விமானத் தாக்குதல் எச்சரிக்கைகள் காரணமாக தர்மசாலாவில் நேற்று நடைபெற்ற பஞ்சாப் கிங்ஸ் மற்றும் டெல்லி கேபிடல்ஸ் இடையேயான போட்டி பாதியில் கைவிடப்பட்டது.

இதையடுத்து, மற்ற போட்டிகள் தொடர்பாக முடிவெடுக்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (BCCI), அவசர ஆலோசனை நடத்தியது. கூட்டத்துக்குப் பின்னர் பேசிய சென்னை சூப்பர் கிங்ஸ் நிர்வாக இயக்குநர் கே.எஸ்.விஸ்வநாதன், "ஐபிஎல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. வீரர்கள் தங்கள் இடங்களுக்குத் திரும்பி வருகின்றனர்" என தெரிவித்துள்ளார்.

"நாடு போரில் இருக்கும்போது கிரிக்கெட் தொடர்வது நல்லதல்ல" என்று பிசிசிஐ அதிகாரி ஒருவர் பிடிஐ செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

"ஊழியர்கள் மற்றும் ரசிகர்களின் பாதுகாப்புதான் மிகவும் முக்கியம். எனவே, போட்டிகள் காலவரையின்றி ஒத்திவைக்கப்படுகின்றன. இந்த நேரத்தில் பிசிசிஐ நாட்டுடன் நிற்க விரும்புகிறது, இதனால் உடனடியாக ஐபிஎல் 2025 ஐ நிறுத்தி வைக்கிறது. சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் கலந்து ஆலோசித்த பிறகே இந்த முடிவு எடுக்கப்பட்டது. போட்டிகள் மீண்டும் எப்போது நடக்கும் என்பது குறித்து விரைவில் விரிவான தகவல் வெளியிடப்படும்" என கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அனைத்து பங்க்குகளிலும் பெட்ரோல், டீசல் போதிய அளவு கையிருப்பு உள்ளது: ஐஓசி

சென்னை: மே.10-

'இந்தியன் ஆயில் நிறுவனத்தின் அனைத்து பெட்ரோல் பங்க்குகளிலும் போதிய அளவு பெட்ரோல், டீசல் கையிருப்பு உள்ளதால், பொதுமக்கள் அச்சம் அடைய தேவையில்லை' என, அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களான இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம், இந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய நிறுவனங்கள் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு ஆகியவற்றை விநியோகம் செய்து வருகின்றன. இந்நிலையில், நேற்றுமுன்தினம் இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனத்தின் பெட்ரோல் பங்க்குகளில் திடீரென பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டது. அந்நிறுவனத்தின் சர்வரில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, டேங்கர் லாரிகளில் பெட்ரோல், டீசல் நிரப்புவதில் சிக்கல் ஏற்பட்டது. இதனால், அந்நிறுவனத்தின் பெட்ரோல் பங்க்குகளில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையே, இந்தியாபாகிஸ்தான் இடையே போர் பதற்றம் ஏற்பட்டுள்ளதால், பெட்ரோல், டீசலுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என சமூகவலை தளங்களில் செய்தி பரவியுள்ளது. இந்நிலையில், இந்தியன் ஆயில் நிறுவனத்தின் அனைத்து பெட்ரோ பங்க்குகளிலும் போதிய அளவு பெட்ரோல், டீசல் கையிருப்பு உள்ளதால், பொதுமக்கள் அச்சம் அடைய தேவையில்லை என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, அந்நிறுவனம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், 'நாடு முழுவதும் உள்ள இந்தியன் ஆயில் நிறுவனத்தின் பெட்ரோல் பங்க்குகளில் போதிய அளவு பெட்ரோல், டீசல் கையிருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதனால், அவற்றின் விநியோகம் எவ்வித தடையின்றி சீராக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, பொதுமக்கள் எவ்வித பதற்றமும் அடைய தேவையில்லை. பெட்ரோல் பங்க்குகளில் கூட்ட நெரிசலை ஏற்படுத்தி, விநியோகத்தில் தடை ஏற்படுத்த வேண்டாம்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'போர்ச் சூழலில் எனது பிறந்தநாள் கொண்டாட்டங்களைத் தவிர்த்திடுக' இபிஎஸ்



சென்னை, மே.,10-

"பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் போர்க்கால நடவடிக்கைகளுக்கு, ஒரு தேசமாக நாம் அனைவரும் துணை நிற்க வேண்டிய தருணம் இது. இச்சூழலில், எதிர்வரும் எனது பிறந்த நாளை முன்னிட்டு, கட்சியினர் என்னை நேரில் வந்து சந்திப்பதையும், எந்தவிதமான கொண்டாட்டங்களையும் தவிர்த்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்" என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: பயங்கரவாதத் தாக்குதலுக்கு எதிர்வினையாக இந்தியா 'ஆபரேஷன் சிந்தூர்' நடத்திய பிறகு, இந்தியாவின் பல நகரங்களைத் தாக்குவதற்கு பாகிஸ்தான் முற்பட்ட நிலையில், அதனை முறியடித்து நம் நாட்டு மக்களைக் காத்து வரும் மேன்மைமிகு ராணுவப் படைகளுக்கு எனது இதயமார்ந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் போர்க்கால நடவடிக்கைகளுக்கு, ஒரு தேசமாக நாம் அனைவரும் துணை நிற்க வேண்டிய தருணம் இது. இச்சூழலில், எதிர்வரும் எனது பிறந்த நாளை முன்னிட்டு, என் உயிருக்கும் உயிரான தொண்டர்கள், என்னை நேரில் வந்து சந்திப்பதையும், எந்தவிதமான கொண்டாட்டங்களையும் தவிர்த்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேசமயம், எளியோர்களுக்கான ரத்த தானங்கள், மருத்துவ முகாம்கள், நலத்திட்ட உதவிகள் வழங்குதல் உள்ளிட்ட சமூக நலச் செயல்பாட்டு நிகழ்வுகளை மட்டும் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். நமக்காக எல்லையில் போர் புரியும் நம் ராணுவ வீரர்கள் நலமுடன் இருக்கவும், வெற்றி பெற்றிடவும், திருக்கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள் உள்ளிட்ட வழிபாட்டுத் தலங்களில் இறைவனிடம் பிரார்த்திக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்" என்று அவர் கூறியுள்ளார்.

## காஷ்மீரில் சிக்கியுள்ள தென்மாநில மாணவர்களை மீட்டுவர மத்திய அமைச்சர்களுக்கு வைகோ கடிதம்



சென்னை: மே.10-

காஷ்மீரில் சிக்கியுள்ள தென் மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களை பாதுகாப்பாக மீட்டுவர உள்துறை மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சர்களுக்கு வைகோ கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பான கடிதத்தில், "தீவிரவாதிகளின் துப்பாக்கிச் சூடு நாட்டின் எல்லைக்கு அப்பாலிலிருந்து தொடர்ந்து நடந்துவரும் சூழலில், ஸ்ரீநகர் ஷேர் இ காஷ்மீர் வேளாண் பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியுள்ள தமிழ்நாடு, கேரளா, தெலங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களின் எதிர்கொண்டுள்ள பாதுகாப்பற்ற சூழ்நிலையையும் அவர்கள் படும் சொல்லொணா துயரத்தையும் உங்கள் கவனத்துக்குக் கொண்டுவருகிறேன்.

உள்ளூர் மாணவர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்குச் சென்றுவிட்டாலும், மற்ற மாநிலங்களைச் சேர்ந்த சுமார் 120 மாணவர்கள் பல சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். மேலும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மிகவும் கவலையடைந்துள்ளனர். எனவே, அவர்களை அந்தந்த மாநிலங்களுக்கு பாதுகாப்பாக அழைத்து வருமாறு எனக்கு தனிப்பட்ட அழைப்புகள், மின்னஞ்சல்கள் வந்துகொண்டே இருக்கின்றன.

தாக்குதல்கள் நடைபெறும் மண்டலத்திலிருந்து மாணவர்களைப் பாதுகாப்பாக அழைத்து வருவதற்கு உதவ தமிழக அரசும் தயாராக உள்ளது. எனவே, ஸ்ரீநகரில் உள்ள மாணவர் விடுதிகளில் இருந்து அம்மாணவர்களை அவர்களின் சொந்த மாநிலங்களுக்கு பாதுகாப்புடன் விரைவில் அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு உதவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்." என்று தெரிவித்துள்ளார்.



## ஒரே இலக்கு.. ஒன்பது தாக்குதல்.. பலரையும் திருப்திபடுத்திய பிரதமர் மோடியின் நடவடிக்கை

டெல்லி, மே.10-

முதல் பார்வையில், 'ஆபரேஷன் சிந்தூர்' என்பது பாகிஸ்தான் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் 9 இடங்களில் ஒருங்கிணைந்த தாக்குதலாகத் தெரிகிறது. ஆனால் இந்த நடவடிக்கை, இந்திய சமூகம் மற்றும் அரசியல் பற்றி ஆழமானப் புரிதலுடன் பிரதமர் நரேந்திர மோடியால் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 22ல் பஹல்காமில் பாகிஸ்தான் தொடர்புடைய தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். மணமான இந்துப் பெண்களின் நெற்றித் திலகம் துடைக்கப்பட்ட துயரம் நிகழ்ந்தது. இதற்கு 15 நாட்களில் மே 7ல் இந்தியா பதிலடி கொடுத்துள்ளது. இதற்கானப் பெயரை இந்திய ராணுவம் முதன்முறையாக கவனமாக சிந்தித்தது. காரணம் இந்த நடவடிக்கையை இந்திய மக்களுடன் உணர்வுபூர்வமாக இணைக்கவும் விரும்பியது. இதற்கு பிரதமர் மோடியே யோசித்து 'ஆபரேஷன் சிந்தூர்' எனப் பெயரிட்டிருந்தார். இந்த தாக்குதல் பாகிஸ்தானுக்கு கற்பனை செய்து பார்த்திராத சேதத்தை ஏற்படுத்தி விட்டது.

இந்திய ராணுவ நடவடிக்கை தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தும் பொறுப்பு, ராணுவத்தின் இரண்டு பெண் அதிகாரிகளான கர்னல் சோபியா குரேஷி, விங் கமாண்டர் வியோமிகா சிங் ஆகியோருக்கு அளிக்கப்பட்டது. இந்திய ராணுவ நடவடிக்கையில் பாகிஸ்தானின் ஜிஹாதி உள்கட்டமைப்பு குறி வைக்கப்பட்டது. மாறாக, பொதுமக்கள் மற்றும் ராணுவ இலக்குகள் குறி வைக்கப்படவில்லை. இதை இரு நாடுகளுக்கு

இடையிலான போர் என்றில்லாமல், தீவிரவாதத்திற்கு எதிரான போராக பிரதமர் மோடி திட்டமிட்டார்.

இதுபோன்ற நடவடிக்கையில் மேற்கத்திய நாடுகள் கடந்த காலங்களில் ஈடுபட்டுள்ளன. இவை அனைத்துக்கும் மேலாக பிரதமர் மோடி தனது தாக்குதலால், பாகிஸ்தானுக்கும் அதன் தீவிரவாதிகளுக்கும் பலவித நெருக்கடிகளை ஏற்படுத்தி விட்டார்.

சதுரங்க ஆட்டத்தின் சிறந்த வீரர்கள் ஒரே ஒரு காய் நகர்த்தலில் பல இடங்களில் சிக்கலை உருவாக்குவது உண்டு. இந்தவகையில், பிரதமர் மோடியும் ஆபரேஷன் சிந்தூரில் வைக்கப்பட்ட ஒரே இலக்கு, ஒன்பது தாக்குதலுக்கு காரணமாகி விட்டது. இந்த தாக்குதலால் இந்தியர்கள், குறிப்பாக பெண்கள், மாநில அரசுகள் மற்றும் எதிர்க்கட்சிகளும் திருப்தி அடைந்துள்ளதை பார்க்க முடிகிறது.

கடந்த 2014ல் தொடங்கிய மோடி அலையின் வீச்சு, 2019ல் குறைந்ததாகக் கருதப்பட்டது. 2024 மக்களவைத் தேர்தலில் இது ஓய்ந்ததாகவும் பேச்சுக்கள் எழுந்தன. இச்சூழலில் ஆபரேஷன் சிந்தூர், மீண்டும் மோடி அலைக்கு உயிர் கொடுத்துள்ளது. அவரது துணிச்சலான தலைமையை வெளிப்படுத்த தொடங்கி உள்ளது. பாஜகவும் தனது 'எக்ஸ்' பதிவில் ராணுவ தாக்குதல் மற்றும் பிரதமர் மோடி வாக்குறுதியின் காட்சிப் பதிவுகளை இணைத்து வெளியிட்டுள்ளது. இந்தப் பதிவுகளில் பல ஒரு வரி வாசகங்கள் பிரதமர் மோடியின் புகழை மீண்டும் பரப்பத் தொடங்கியுள்ளன.



# எடப்பாடியார் 2026-ல் தமிழக முதலமைச்சர் ஆக்குவோம்: குன்றத்தூர் முருகன்கோவிலில் 1001 மேற்பட்ட பால்குடம்

குன்றத்தூர், மே.10-

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூரில் மே 12ல் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு குன்றத்தூர் பெருமாள் கோவிலில் சிறப்பு வழிபாடு செய்யப்பட்டு பால்குடம் ஏந்தி ஊர்வலமாக முருகன்கோவிலில் வந்தடைந்து சுமார் ஆயிரத்துக்கு 1001 மேற்பட்ட பெண்கள் பால் குடம் எடுத்து எடப்பாடியார் அவர்களை 2026 தமிழக முதலமைச்சர் ஆக்குவோம் என வேண்டி சிறப்பு அபிஷேகம் செய்தனர். இந்நிகழ்ச்சியில். ஸ்ரீ பெருமந்தூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் குன்றத்தூர் ஒன்றிய கழகச் செயலாளருமான முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான. கே.பழனி ஏற்பாட்டில், மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர்கள் வைகைச் செல்வன், வி.சோமசுந்தரம் தலைமையில் பெண்கள் பால்குடம் ஏந்தி ஊர்வலமாக எடுத்து சென்று பாலபிஷேகம் செய்து சிறப்பு வழிபாடுகள் செய்தனர். இதில் வாலாஜாபாத் பா.கணேசன், அம்மா பேரவை துணைச் செயலாளர் வழக்கறிஞர் விஜயகுமார், சிறுபான்மை பிரிவு மாநில செயலாளர் இம்தியாஸ், 26வது வார்டு செயலாளர் பி.முருகவேல், படப்பை ஆர்.மாரி, காவனூர் ஊராட்சி மன்ற தலைவர் உமா மகேஸ்வரி வெங்கடேசன், தொழில்நுட்ப அணி நடுவை ரகுவரன், உட்பட பலர் உடன் இருந்தனர்

# மதுரை மீனாட்சி அம்மன் சுந்தரேஸ்வரர் கோயில் சித்திரை திருவிழா திருத்தேரோட்டம்





மதுரை, மே.10-

உலக பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சிசுந்தரேசுவரர் கோவில் சித்திரை திருவிழா கடந்த மாதம் 29ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாக்காலங்களில் தினமும் காலை, மாலை வேளைகளில் மீனாட்சி அம்மன், பிரியாவிடை சுந்தரேசுவரர் மதுரை வீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தனர்.

மீனாட்சி அம்மன் பட்டாபிஷேகம், திக்கு விஜயம் போன்ற வைபவங்களை தொடர்ந்து 10ம் திருநாளான நேற்று திருக்கல்யாணம் விமரிசையாக நடைபெற்றது. மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள திருக்கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவை காண ஏராளமானோர் திரண்டனர். தொடர்ந்து அன்னதானம், திருக்கல்யாண விருந்து, மொய் செலுத்துதல் போன்றவையும் நடைபெற்றன. சித்திரை திருவிழாவின் மற்றொரு முத்தாய்ப்பு நிகழ்ச்சியான தேரோட்டம் இன்று காலை விமரிசையாக நடைபெற்றது. முன்னதாக 2 தேர்களும் மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு தயார் நிலையில் இருந்தன நேற்று அதிகாலை 4 முதல் 4.30 மணிக்கு மீனாட்சி அம்மன், பிரியாவிடை சுந்தரேசுவரர் ஆகியோர் முத்தம்பல முதலியார் கட்டளை மண்டகப்படி, ராமநாதபுரம் சேதுபதி மகாராஜா மண்டகப்படிக்கு எழுந்தருளினர். அங்கு சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டன. தொடர்ந்து ஒரே பல்லக்கில் மீனாட்சி அம்மன், பிரியாவிடை சுந்தரேசுவரர் கீழமாசி வீதியில் உள்ள தேரடிக்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு தீபாராதனைகள் காண்பிக்கப்பட்டன. அதன்பிறகு பிரியாவிடை சுந்தரேசுவரர் பெரிய தேரிலும், மீனாட்சி அம்மன் சிறிய தேரிலும் எழுந்தருளினர். அப்போது திரண்டிருந்தவர்கள் பக்தி கோஷம் எழுப்பினர். தேரோட்டம் தொடங்குவதற்கு முன்பு அங்குள்ள கருப்பண சுவாமிக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

காலை 5.05 மணிக்கு மேல் 5.29 மணிக்குள் மேஷ லக்கனத்தில் ரதாரோஹணம் நடைபெற்று காலை 6.30 மணிக்கு முதலில் சுவாமி தேரையும், தொடர்ந்து அம்மன் தேரையும் பக்தர்கள் வடம் பிடித்து இழுத்தனர். மாசி வீதிகளில் ஆடி அசைந்து வந்த மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருத்தேரின் முன்பாக ஏராளமான சிவ பக்தர்கள் கைலாய வாத்தியங்களை முழங்கியபடியும், பல்வேறு இசைகளை இசைத்தபடியும் மீனாட்சி சுந்தரேசுவரர் பதிகம் பாடியபடியும், ஹர ஹர சிவா என பக்தி முழக்கம் விண்ணைப்பிளக்க பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்துசென்று சாமி தரிசனம் செய்தனர்.4 மாசி வீதிகளிலும் தேர்கள் அசைந்தாடி சென்றதை பொதுமக்கள் சாலையின் இருபுறமும் உள்ள உயர்ந்த கட்டிடங்களில் நின்றும் தரிசனம் செய்தனர். சுவாமி அம்மன் தேருக்கு முன்பு அலங்கரிக்கப்பட்ட யானை அழைத்துச் செல்லப்பட்டது. அதன் பிறகு விநாயகர், முருகன், நாயன்மார்கள் தனித்தனி சிறிய சப்பரங்களில் சென்றனர். மாசி வீதிகளை வலம் வந்த தேர்கள் மதியம் நிலையை வந்தடைந்தன. அதன் பிறகு சண்டிகேஸ்வரர் வீதி உலா நடைபெற்றது. தேரோட்ட விழாவில் லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றதால் ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். திருவிழாவை காணவந்த பக்தர்கள் தங்களது வாகனங்களை நிறுத்துவதற்கு தனி இடவசதிசெய்யப்பட்டிருந்தது. மக்கள் சிரமமின்றி தரிசனம் செய்ய வசதியாக போக்குவரத்தில் போலீசார் மாற்றங்கள் செய்து அதனை செயல்படுத்தினர்.

தேரோட்டத்தை தொடர்ந்து இன்று மாலையில் மீனாட்சி அம்மன், பிரியாவிடை சுந்தரேசுவரர் சப்தாவர்ண சப்பரத்தில் மாசி வீதிகளை வலம் வருகின்றனர். (10ந் தேதி) உச்சிக் காலத்தில் பொற்றாமரை குளத்தில் தீர்த்த திருவிழா நடக்கிறது. இரவு 10.15 மணிக்கு திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமியும், பவளக்கனிவாய் பெருமாளும் 16 கால் மண்டபத்தில் இருந்து விடை பெற்றுச் செல்கின்றனர். இந்த நிகழ்ச்சியோடு மீனாட்சி அம்மன் கோவில் சித்திரை திருவிழா நிறைவு பெறுகிறது.



■ தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் வட்டம் பாஞ்சாலங்குறிச்சியில் அமைந்துள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையில் சுதந்திரப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் விழாவினை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் சார்பில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மகாலட்சுமி அவர்கள், ஓட்டப்பிடாரம் வட்டாட்சியர் திரு.ஆனந்த் அவர்கள் உள்ளனர்.



■ மதுரை வணிகவரித்துறை இணை ஆணையர் அலுவலக வளாகத்தில் புதிய கட்டிடத்திற்கான பூமி பூஜையில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி கலந்து கொண்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மா.சௌ.சங்கீதா இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன் இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஆ.வெங்கடேசன் அவர்கள் (சோழவந்தான்). திரு.மு.பூமிநாதன் அவர்கள் (மதுரை தெற்கு) ஆகியோர் உடன் உள்ளனர்.



# தமிழக அரசு அரசு அதிகாரிகளை கண்டித்து அனைத்து கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டம்

அனகாபுத்தூர், மே.10-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த அனகாபுத்தூர், தாய் மூகாம்பிகை நகர், சாந்தி நகர், எம்ஜிஆர் நகர் பகுதியில் 60 ஆண்டுகளுக்கு மேலாக சுமார் 500க்கும் மேற்பட்ட வீடுகளில் வசிக்கும் 10,000 க்கும் மேற்ப்பட்டவர்களை வேறு இடத்திற்க்கு மாற்ற தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும் தமிழக அரசு, மற்றும் அரசு அதிகாரிகளை கண்டித்து அனைத்து கட்சிகள் இணைந்து நடைப்பெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் தேமுதிக செங்கல்பட்டு மாவட்ட செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அனகை முருகேசன் அதிமுக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.தன்சிங், மே 17 இயக்கத்தின் ஒருங்கினைப்பாளர் திருமுருகன் காந்தி, இந்து பாரத முன்னனி மாநில தலைவர் அனகை ஏ.செல்வம், அவர்கள் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் 1000 த்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த மாவட்ட செயலாளர் அனகை முருகேசன் மற்றும் மே 17 இயக்கத்தின் ஒருங்கினைப்பாளர் திருமுருகன் காந்தி பேசுகையில் நீண்டகாலமாக வசித்து வரும் அனகாபுத்தூர் பகுதி மக்களுக்கு பட்டா வழங்காமல் மக்களை வெளியேற்றி அப்புறபடுத்தும் நடவடிக்கையில் தமிழக அரசு ஈடுபடுகிறது எனவும் பிரபல தனியார் கட்டுமான நிறுவனத்திற்கு சாதமாக இச்செயலை செய்து வருகிறது என்றும் இதனை அனைத்து கட்சியினரும் கண்டிக்கும் வகையில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மேலும் அனகாபுத்தூர் பகுதி மக்களின் வாழ்வாதரத்தை காப்பாற்றும் வகையில் தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் இல்லையெனில் தொடர் போராட்டம் நடைபெறும் என தெரிவித்தனர்.



# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மாதாந்திர ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது

சேலம், மே.10-

சேலம் மாவட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மாதாந்திர ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குப்பின், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

கோடை காலத்தில் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்கப்படுவதை உறுதி செய்திடும் வகையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சேலம் மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்துத் துறை அரசு அலுவலர்களை ஒருங்கிணைத்து ஆய்வுக் கூட்டம் நடத்தப்படுகிறது.

அந்த வகையில், இன்றைய தினம் நடைபெற்ற நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் ஆய்வுக் கூட்டத்தில் மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் என அனைத்துப் பகுதிகளுக்கும் வழங்கப்பட்டு வரும் குடிநீரின் அளவு மற்றும் குடிநீரின் தேவைகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தற்பொழுது, சேலம் மாவட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் 11 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் வாயிலாக மட்டும் 4 நகராட்சிகள், 29 பேரூராட்சிகள் மற்றும் 4,466 ஊரக குடியிருப்புகளுக்கு பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நாள்தோறும் சராசரியாக 193.793 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட சீரான குடிநீர், 33.94 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் வழங்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக, கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து அடுத்து நடைபெறும் ஒவ்வொரு கூட்டங்களிலும் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு சேலம் மாவட்டம் முழுவதும் சீரான குடிநீர் விநியோகம் வழங்கிட தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கோடை காலத்தில் சீரான குடிநீர் வழங்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் அலுவலர்கள் தொடர் கண்காணிப்பினை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. கோடை காலத்தைக் கருத்திற்கொண்டு குடிநீரை தேவைக்கேற்ப சிக்கனமாகப் பயன்படுத்திடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது.

குறிப்பாக, கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளில் எவ்வித மின்தடையும் இல்லாமல் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கப்படுவதை உறுதிசெய்திட தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று, குடிநீர் குழாய்களில் உடைப்புகள் ஏற்பட்டால் உடனுக்குடன் சரிசெய்திட வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திரு. அசோக்குமார், பேரூராட்சிகள் துறை உதவி இயக்குநர் திரு. ர. குருராஜன், உதவி திட்ட அலுவலர் (உட்கட்டமைப்பு) திருமதி உமா நந்தினி உள்ளிட்ட தொடர்புடைய மாநகராட்சி, நகராட்சி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# வணிகவரி இணை ஆணையர் அலுவலக வளாகத்தில்ரூ.595 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள கூடுதல் அலுவலகக் கட்டுமானப் பணியினை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்தார்

மதுரை, மே.10-

மதுரை டாக்டர் தங்கராஜ் சாலையில் உள்ள வணிகவரி இணை ஆணையர் அலுவலக வளாகத்தில் ரூ.595 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள கூடுதல் அலுவலகக் கட்டுமானப் பணியினை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் தொடங்கி வைத்தார்.

வணிகவரி இணை ஆணையர் அலுவலக வளாகத்தில் கட்டப்படவுள்ள புதிய கூடுதல் கட்டடமானது தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்துடன் அமையப்படவுள்ளது. வணிகவரி கூடுதல் இணை ஆணையர் அலுவலகக் கட்டட தரைத்தளமானது 504.65 ச.மீ பரப்பளவிலும், முதல் தளமானது 504.65 ச.மீ பரப்பளவிலும், இரண்டாம் தளமானது 504.65 ச.மீ பரப்பளவிலும், தலையறை 43.50 ச.மீ பரப்பளவிலும், தலைவாயில் 27.46 ச.மீ பரப்பளவிலும் என மொத்தம் 1584.91 ச.மீ பரப்பளவில் ரூ.595 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கான கட்டுமானப் பணிகளை இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், புதிதாக கட்டப்படவுள்ள கூடுதல் அலுவலகக் கட்டட தரை தளமானது நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், பார்வையாளர்கள் காத்திருப்பு அறை, பொது ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கழிவறை உள்ளிட்ட வசதிகளுடனும், முதல் தளமானது இணை ஆணையர் அறை, துணை ஆணையர் அறை, மாநில வணிகவரி அலுவலர் அறை, துணை வணிகவரி அலுவலர் அறை, அலுவலக அறை, பதிவறை, உணவறை, பார்வையாளர்கள் காத்திருப்பு அறை. ஆண்கள் மற்றும் பெண்கள் கழிவறை உள்ளிட்ட வசதிகளுடனும், இரண்டாம் தளமானது உதவி ஆணையர் அறை, மாநில வணிகவரி அலுவலர் அறை, துணை வணிகவரி அலுவலர் அறை, அலுவலக அறை, பதிவறைகள், நூலக அறை, ஆண்கள் மற்றும் பெண்கள் கழிவறை உள்ளிட்ட வசதிகளுடனும், கூடுதல் வசதியாக ஆழ்துளை கிணறு வசதி மற்றும் 250 லிறிபி கொள்ளளவு கொண்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி உள்ளிட்ட வசதிகளுடனும் அமைக்கப்படவுள்ளது. வணிகவரி இணை ஆணையர் அலுவலக கூடுதல் கட்டடத்திற்கான கட்டுமானப் பணிகளை துரிதமாக மேற்கொண்டு விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த விழாவின் போது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மா.சௌ.சங்கீதா, இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன், இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஆ.வெங்கடேசன் (சோழவந்தான்) அவர்கள், திரு.மு.பூமிநாதன் (மதுரை தெற்கு) அவர்கள், இணை ஆணையர் திருமதி.பி.கீதா பாரதி அவர்கள், இணை ஆணையர் (சட்டம்) திருமதி.எம்.மகேஸ்வரி அவர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியம், ரெகுநாதபுரம் கிராமத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது. இதனை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.



■ 2024–2025ஆம் கல்வி ஆண்டு நடைபெற்ற பன்னிரண்டாம் வகுப்பு மாநில அளவிலான பொதுத்தேர்வில் ஸ்ரீ அரபிந்தோ மீரா பள்ளி மாணவி பி.பி. லோகப்ரியா, 598/600 மதிப்பெண்கள் எடுத்து, மாநில அளவில் இரண்டாம் இடமும், மதுரை மாவட்டத்தில் முதலிடமும் பெற்று அபார சாதனை படைத்துள்ளார். தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் 99 மதிப்பெண்களும். பொருளாதாரம், வணிகவியல், கணக்குப் பதிவியல், வணிகக் கணிதம் ஆகிய நான்கிலும் 100க்கு 100 மதிப்பெண்களும் பெற்று பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளார். மாணவி லோகப்பிரியாவை ஸ்ரீ அரபிந்தோ மீரா பள்ளிக்குழுமத்தின் தலைவர் முனைவர் சி.சந்திரன், பள்ளி நிர்வாக இயக்குநர் MC. அபிலாஷ், பள்ளி முதல்வர் மற்றும் ஆசிரியர்கள் வாழ்த்திப்பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சித்திரை திருவிழா தேரோட்டத்தை முன்னிட்டு ஒவெசெ மேல்நிலை பள்ளியின் அருகில் டாக்டர் அப்துல் கலாம் டாட்டா ஏசி டிரைவர்கள் சங்கம் சார்பில் நீர் மோர் பந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது கோடைகாலத்தில் பொதுமக்களின் தாகம் தீர்க்கும் வகையில் பொதுமக்களுக்கு சேவையாக தொடர்ந்து செய்து வருகின்றனர் ..





■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சீனி ஆசான் சிலம்ப பள்ளியை சார்ந்த மாணவ மாணவிகள் நேற்று நடைபெற்ற சித்திரை திருவிழா தேரோட்டத்தின் போது அலங்காரச் சிலம்பு சுற்றி அங்கு வந்த பார்வையாளர்களை கவர்ந்து இழுத்தனர் அவர்களுக்கு கடுமையான பயிற்சி அளித்த சீனி ஆசான் சிலம்ப பள்ளியின் பயிற்சியாளர்கள் செல்வம் மற்றும் முனியாண்டி பெற்றோர்களும், பொதுமக்களும் வெகுவாக பாராட்டினர்.






## மானாமதுரை சித்திரைத் திருவிழா தேரோட்டம் வெகு விமரிசையாக நடைபெற்றது

மானாமதுரை, மே.10-

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை தேவஸ்தானம், சமஸ்தானத்தினற்கு உட்பட்ட மானாமதுரை அருள்மிகு ஆனந்தவல்லி அம்மன் சமேத சோமநாதர் சுவாமி கோயில் சித்திரைத் திருவிழாவை யொட்டி திருத் தேரோட்டத்தில் ஆயிரக்கண க்கான பக்தர்கள் திரண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.



இக்கோயிலின் சித்திரைத் திருவிழாவில் 8 ஆவது நாள் விழாவாக கடந்த வியாழக்கிழமை திருக்கல்யாணம் நடைபெற்றது. அதைத்தொடர்ந்து திருவிழாவின் 9 ஆவது நாள் நிகழ்வாக நடைபெற்ற திருத்தேரோட்டத்தை முன்னிட்டு அதிகாலையில் பிரியாவிடை சமேதராய் சோமநாதர் சுவாமி பெரிய தேரிலும், அருள்மிகு ஆனந்தவல்லி அம்மன் சிறிய தேரிலும் எழுந்தருளினர்.பின்னர் காலை 10.20மணிக்கு இரு தேர்களும் நிலையிலிருந்து புறப்பட்டன. மானாமதுரை கிருஷ்ணாராஜபுரம் கஸ்பா கிராமத்தினர் ,கீழ்மேல்குடி கிராமத்தினர் மற்றும் பொதுமக்கள் தேர்களை வடம் பிடித்து இழுத்தனர். அனைத்து குழந்தை செல்வங்கள் ஆனந்தவல்லி அம்மன் வேடம் அனிந்து வந்தனர் முருகன், விநாயகர் எழுந்தருளிய சப்பரங்கள் முன் செல்ல, அதைத்தொடர்ந்து சுவாமியின் பெரிய தேரும் அடுத்ததாக ஆனந்தவல்லி அம்மன் தேரும் வந்தன. மானாமதுரை வீர விதை சிலம்பம் பள்ளி மாணவர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.தாரை தப்பட்டைகள், மேளதாளங்கள், சிவனடியார்களின் கயிலாய வாத்தியங்கள் முழங்க கோயிலைச் சுற்றியுள்ள நான்கு வீதிகளிலும் தேர்கள் ஆடி அசைந்து வந்து, காலை 11.25 மணிக்கு நிலையை அடைந்தது. அப்போது பக்தர்கள் கைகளைத் தட்டி ஆரவாரம் செய்தனர். சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத் ,ஆய்வாளர் ரவீந்திரன், சார்பு ஆய்வாளர்கள் குகன் ,ராஜதுரை , சிறப்பு சார்பு ஆய்வாளர்கள் மற்றும் போக்குவரத்து காவல் ஆய்வாளர் வெங்கடேஸ்வரன் ஆகியோர் தலைமையில் 500ற்கும் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் வட்டம் பாஞ்சாலங்குறிச்சியில் தமிழ்நாடு அரசின் சார்பில்

## சுதந்திரப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்

தூத்துக்குடி, மே.30-

தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் வட்டம் பாஞ்சாலங்குறிச்சியில் அமைந்துள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் நினைவு கோட்டையில் தமிழ்நாடு அரசின் சார்பில் நடைபெற்ற சுதந்திரப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் விழாவில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

ஜெகவீர கட்டபொம்மன் மற்றும் ஆறுமுகத்தம்மாள தம்பதியருக்கு மகனாக 1760ஆம் ஆண்டு பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்தார். கட்டபொம்மன் வீரசக்கம்மாள் என்பவரை மணமுடித்தார். அவருக்கு முப்பது வயதாகும் வரை அவரது தந்தை ஜெகவீர கட்டபொம்மன் பாளையக்காரராக இருந்து வந்ததால் தந்தைக்கு உதவியாக இருந்தார். கட்ட பொம்மன் பிப்ரவரி 2ஆம் தேதி. 1790ஆம் ஆண்டில் 47வது பாளையக்காரராக அரியணை பொறுப்பை ஏற்றார். வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்கள் அரியணை பொறுப்பை ஏற்ற அதே சமயத்தில் ஆங்கிலேயர்கள் பிரித்தானிய கிழக்கிந்திய கம்பெனியை இந்தியாவில் தொடங்கினர்.

பாளையக்காரர்கள் அனைவரிடமிருந்து கப்பம் பெற்றுக்கொண்ட ஆங்கிலேயர்களால் கட்டபொம்மனிடம் தங்கள் சர்வாதிகாரம் பலிக்காமல் அவமானம் அடைந்தனர். அதனால் சமாதானம் பேசுவது என்ற போர்வையில் கட்டபொம்மனுக்கு தூது அனுப்பினார்கள். ஜாக்சன் துரை என்பவர் வரி கட்டுமாறு கட்டபொம்மனை பணித்தார். ஆனால் கட்டபொம்மன் ஜாக்சன் துரையிடம் நாங்கள் ஏன் வரி கட்ட வேண்டும் என்று எதிர்த்துப் பேசினார். அங்கே நடந்த பேச்சுவார்த்தை தோல்வியாகி கைகலப்பில் முடிந்தது. ஆங்கிலேயரின் இந்த திட்டமிட்ட வஞ்சக வலையில் சிக்காமல் தன் வீரத்திறமையால் அங்கிருந்து தப்பினார். வீரபாண்டிய கட்டபொம்மனது வீரமும், விவேகமும் சுற்றியுள்ள அனைத்துப் பாளையக்காரர்களிடம் புகழாய்ப் பரவி, அனைவர் மனதிலும் வீரத்தை விதைத்தது.

பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை ஆங்கிலேயர்கள் கைப்பற்றிய பின் கைது செய்யப்பட்டார். பின் கயத்தாறு புளிய மரத்தடியில் விசாரணை நடத்தி கட்டபொம்மனை குற்றவாளியென ஆங்கிலேயர்கள் அறிவித்தனர். தன் மீது சுமத்தப்பட்ட குற்றங்களை கட்ட பொம்மன் மறுக்கவில்லை. உயிர்ப் பிச்சைக் கேட்கவுமில்லை. மாறாக கம்பீரத்தோடு எனது தாய்மண்ணைக் காப்பதற்காக ஆங்கிலேயர்களுக்கு எதிராக பாளையக் காரர்களைத் திரட்டினேன். போர் நடத்தினேன் என்று முழங்கியவாறு தூக்குமேடையேறினார். தூக்குமேடை ஏறிய போதும், அவரது பேச்சில் வீரமும் தைரியமும் நிறைந்திருந்தது. அக்டோபர் 19ஆம் தேதி. 1799 ஆம் ஆண்டில் கயத்தாறில் தூக்கிலிடப்பட்டார்.

தமிழ்நாடு அரசின் சார்பில் தூத்துக்குடி மாவட்டம், பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மன் விழா ஆண்டுதோறும் சித்திரை திங்கள் கடைசி வெள்ளி அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இன்று நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில் சுதந்திரப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத் இ.ஆ.ப. அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், வீரபாண்டிய கட்டபொம்மன் வாரிசு தாரரான திரு.வீமராஜா என்ற ஜெகவீர பாண்டிய கட்டபொம்மன் துரை அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் திருமதி மகாலட்சுமி. ஓட்டப்பிடாரம் வட்டாட்சியர் திரு.ஆனந்த், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.போ. முத்துக்குமார், வீரபாண்டிய கட்டபொம்மன் வாரிசுதாரர்கள், வீரசக்க தேவி ஆலயக்குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.







■ சிவகங்கை மாவட்டம் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பிரிவு நடைபெற்ற பள்ளி வாகன ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் ,காவல்துறை கண்காணிப்பாளர் அமலா அட்மின்.வட்டாரப் போக்குவரத்து அலுவலர் கருப்பணன், தீயணைப்பு Ado, ஜெ. ஜெயராணி. மற்றும் 200 ருக்கும் மேற்பட்ட பள்ளி வாகனங்கள் ஆய்வு மேற்கட்டப்பட்டது இதில் ஓட்டுநர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு எவ்வாறு பாதுகாப்பாக மாணவர்களை குழந்தைகளை பாதுகாக்க வேண்டும் என்ற தீயணைப்பு வீரர்களின் மூலம் தீயணைப்பு உபகரணங்களை வைத்து செயல் விளக்கங்கள் அளிக்கப்பட்டன,அனைத்து ஓட்டுநர் மற்றும் உதவியாளர்கள் கலந்து கொண்டனர்.







■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஆனந்தவல்லி சோமநாதர் கோயில் சித்திரை திருவிழா கடந்த மே1ஆம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கியது இதனைத் தொடர்ந்து தினம் தோறும் சுவாமிகள் பல்வேறு வாகனங்களில் வீதி உலா வந்தனர். தேரோட்டத்திற்காக சோமநாதர் பிரியாவிடையுடன் பெரிய தேருக்கும், ஆனந்தவல்லி அம்மன் பெரிய தேருக்கு பின்னால் உள்ள சிறிய தேரிலும் எழுந்தருளினர்.பெரிய தேருக்கு முன்னால் இருந்த சிறிய தேரில் முருகன் வள்ளி,தெய்வானையுடன் எழுந்தருளினர். காலை 10:20 மணிக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் தேரை இழுத்தனர்.மானாமதுரை வீர விதை சிலம்ப அணி மாஸ்டர் கலை வளர்மணி முனைவர் கே.பெருமாள் தலைமையில் மாணவர்களின் அலங்கார சிலம்பம் அணிவகுப்பு பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது.

## தமிழகத்தில் மே 14 வரை மிதமான மழைக்கு வாய்ப்பு

சென்னை, மே.10-

தமிழகத்தில் இன்றுமுதல் 14ம் தேதி வரை ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தென்னிந்திய பகுதிகளின்மேல், வளிமண்டல கீழடுக்கு பகுதிகளில் கிழக்கு மற்றும் மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் இன்று (மே 9) ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 10, 11 தேதிகளில் ஓரிரு இடங்களிலும், 12 முதல் 14ம் தேதி வரை ஒருசில இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழகத்தில் இன்று ஓரிரு இடங்களிலும், 10, 11 தேதிகளில் ஒருசில இடங்களிலும் அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தைவிட 5 டிகிரி ஃபாரன்ஹீட் அதிகமாக இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. தென்தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 50 கி.மீ. வேகத்திலும் இடையிடையே 55 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும். தமிழகத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக சேலம் மாவட்டம் சந்தியூரில் 11 செ.மீ., கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறை, விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் தலா 8 செ.மீ., சேலம் மாவட்டம் ஓமலூரில் 7 செ.மீ., அரியலூர் மாவட்டம் திருமானூர், கோவை மாவட்டம் சின்னக்கல்லார், தேனி மாவட்டம் பெரியகுளம், நீலகிரி மாவட்டம் கின்னக்கோரை, திண்டுக்கல் ஆகிய இடங்களில் தலா 6 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## 587 பள்ளிக் கல்வி வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது: மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தகவல்

புதுக்கோட்டை, மே.10-

புதுக்கோட்டை மாவட்டம்ஃ மாநகராட்சி, ஆயுதப்படை மைதானத்தில், வட்டார போக்குவரத்து அலுவலகம் சார்பில், அனைத்து பள்ளிக் கல்வி வாகனங்கள் ஆய்வு செய்யும் பணிகள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் நடைபெற்றது.



பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது;

தமிழக அரசு உத்தரவின்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில் பள்ளி செல்லும் மாணவ, மாணவிகளின் பாதுகாப்பினை கருத்தில்கொண்டு மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளி வாக னங்களின் இயக்கத்தினை முறைப்படுத்திடவும், ஓட்டுநர்களுக்கு சாலை பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்திடவும், அனைத்து பள்ளி வாகனங்களையும் ஒரே நாளில், ஒரே இடத்தில் ஆய்வு செய்ய முடிவு செய்யப்பட்டது.

அதனடிப்படையில் இன்றையதினம் புதுக்கோட்டை ஆயுதப்படை மைதானத்தில் அனைத்து பள்ளி கல்வி வாகனங்கள் ஆய்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த ஆய்வில் வாகனங்களின் பதிவுச்சான்று, காப்புச் சான்று, அனுமதிச்சீட்டு, ஓட்டுநர் உரிமம், நடத்துனர் உரிமம், ஊர்தி இயக்கப் பதிவேடு, நடப்பில் உள்ள முதலுதவிப் பெட்டி, அவசரவழி, தீயணைப்புக் கருவி, ஓட்டுநர் பெயர்வில்லை பொருத்திய உரிய சீருடை, படிக்கட்டுகள், கதவுகள் மற்றும் ஆவணங்கள் உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்பு அம்சங்கள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மேலும், வேகக்கட்டுப்பாடு கருவிஃ உபகரணம் மற்றும் வாகனத்தில் கேமராக்கள் பொருத்தப்பட்டிருப்பது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

இந்த ஆய்வில், புதுக்கோட்டை பகுதியில் 268 வாகனங்களும், அறந்தாங்கி பகுதியில் 110 வாகனங்களும், இலுப்பூர் பகுதியில் 133 வாகனங்களும், ஆலங்குடி பகுதியில் 76 வாகனங்களும் என மொத்தம் 587 வாகனங்கள் ஆய்வு செய்யப்படுகிறது. இதில் ஆய்விற்கு வராத பள்ளி வாகனங்களின் அனுமதிச்சீட்டினை ரத்து செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் ஆய்வின்போது குறைபாடுகள் கண்டறியப்பட்ட வாகனங்களுக்கு தகுதிச்சான்று வழங்கப்படுவது தடை செய்யப்பட்டு, குறைகள் சரி செய்த பின்னரே மறுஆய்வு செய்து தகுதிச்சான்று வழங்கப்படும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், வருவாய் கோட்டாட்சியர்கள் திரு.ச.சிவக்குமார் (அறந்தாங்கி), திரு.அ.அக்பர்அலி (இலுப்பூர்), மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு.க.ஸ்ரீதர், வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.சு.நடராஜன், மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) திருமதி. லீலாவதி, ஆயுதப்படை துணை கண்காணிப்பாளர் திருமதி.கீதா, மோட்டார் வாகன ஆய்வாளர்கள் திரு.சிவக்குமார் (இலுப்பூர்), திரு.சசிக்குமார் (அறந்தாங்கி) மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



உலக அளவில் புகழ்பெற்ற வேலூர் ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடம் தங்கக்கோயிலில் 33ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு

## 10008 மஞ்சள் நீர் குடங்களை யானைகளுடன் ஊர்வலமாக பல்வேறு மேளதாளங்கள் முழங்க எடுத்து வந்து பக்தர்கள் சாமிக்கு அபிஷேகம்

வேலூர், மே.10-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, திருமலைக்கோடி, உலக அளவில் புகழ்பெற்ற ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடத்தின் 33ஆம் ஆண்டு விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு 10008 மஞ்சள் குடங்களை பல்வேறு பெண்களும் ஆண்களும் எடுத்து கொண்டு யானைகளுடன் பல்வேறு மேளதாளங்கள் முழங்க ஊர்வலமாக வந்து சுயம்பு ஸ்ரீ நாராயணி அம்மனுக்கு பக்தர்கள் வரிசையில் காத்திருந்து தங்கள் கைகளாலேயே அபிஷேகம் செய்தனர். பின்னர் ஆலயத்தில் ஸ்ரீ நாராயணி மூல மந்திர சிறப்பு யாகமும் நடைபெற்றது. இதில் மக்கள் அமைதி யாகவும் நலமுடனும் நோய் நெடிகளின்றி வாழ வேண்டி பல்வேறு மூலிகைகளை தங்க கோவில், சக்தி அம்மா யாகத்தில் போட்டு சிறப்பு யாகம் நடைபெற்றது. இந்த சிறப்பு நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக மத்திய கனரக தொழில்துறை மற்றும் உலோகத்துறை அமைச்சர் பூபதி ராஜு சீனிவாச வர்மா தனது குடும்பத்தினருடன் பங்கேற்று சாமிதரிசனம் செய்தனர். இந்நிகழ்ச்சியில் உள்ளூர் மற்றும் வெளியூர் வெளிநாட்டவர்கள் என திரளானோர் இந்த சிறப்பு பூஜைகளில் பங்கேற்று சாமி தரிசனம் பெற்றனர்.

## மானாமரை சந்திப்பு நிலையத்தில் டிஜிட்டல் போர்டு வைக்கப்படுமா?






மானாமதுரை, மே.10-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சந்திப்பு நிலையம் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது அதற்குப் பின்னர் ரயில் நிலைய கட்டிடங்கள் ஒரு சில பகுதியில் புதுப்பிக்கப்பட் டிருந்தாலும் காவல் நிலையங்கள் பழைய கட்டிடங்களே இயங்கி வருகிறது பழைய கட்டிடங்களை அகற்றிவிட்டு புதிய கட்டிடங்கள் கட்ட வேண்டும் என கடந்த சில மாதங்களுக்கு முன்பு கோரிக்கை எழுந்தது இதில் மேலும் பற்றாக்குறையாக தினசரி எத்தனை ரயில்கள் வந்து செல்லும் என அட்டவணை மட்டுமே உள்ளது அவ்வப்போது ரத்து செய்யப்படும் ரயில்கள் சிறிய அறிவிப்புகளை வைப்பதால் வெளியூர் வாசிகளுக்கு தெரிந்து கொள்வதில் சிரமம் ஏற்படுகிறது.

பிளாட்பாரங்களில் பொதுமக்கள் மற்றும் பயணிகளின் வசதிக்காக கோச் பொசிஷன் தகவல் பலகையும் அமைக்க வேண்டும் இதனால் ரெயிலில் முன்பதிவு செய்து விட்டு வெளியூர் களுக்கு செல்லும் பயணிகள் மற்றும் பொதுமக்கள் தாங்கள் பயணம் செய்யும் ரெயில் பெட்டிகளின் நிலை பற்றி தெரிந்து கொள்ள முடியாமல் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். இதனை தவிர்க்கும் வகையில் மானாமதுரை சந்திப்பு ரயில் நிலையத்தில் டிஜிட்டல் போர்டு வைத்தால் தெரிந்து கொள்ள ஏதுவாக இருக்கும் டிஜிட்டல் போர்டுகளை வைக்க தெற்கு ரயில்வே நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா.?



## செங்கல்பட்டு மாவட்டம் +2 பொதுத் தேர்வில் சாதனை படைத்த சீயோன் குழுமப் பள்ளி மாணவர்கள்

தாம்பரம், மே.10-

செங்கல்பட்டு மாவட்டம் சேலையூர், மாடம்பாக்கம் மற்றும் செம்பாக்கம் சீயோன் பள்ளிகளில் தேர்வெழுதிய 941 மாணவர்கள் அனைவரும் முதல் வகுப்பில் 100 % தேர்ச்சியடைந்து சாதனை படைத்துள்ளனர். இதில் சேலையூர் பள்ளி மாணவி ஆர்.சாதனா தமிழ் 97, ஆங்கிலம் 100, இயற்பியல் 100, வேதியியல் 100, கணிதம் 100, உயிரியல் 100, மதிப்பெண்களுடன் மொத்தம் 597/600 பெற்று சாதனைப்படைத்துள்ளார்.

சீயோன் பள்ளி சேலையூரில் எழுதிய 536 மாணவர்களில் 87 மாணவர்கள் வெவ்வேறு பாடங்களில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்றுள்ளனர் அதில் மாணவி முகிலரசி 595/600 மதிப்பெண்கள் பெற்று சாதனைப்படைத்துள்ளார் சீயோன் பள்ளி மாடம்பாக்கத்தில் எழுதிய 235 மாணவர்களில் 25 மாணவர்கள் வெவ்வேறு பாடங்களில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்றுள்ளனர் அதில் மாணவி சாய் கமலதர்ஷினி 595/600 மதிப்பெண்கள் பெற்றுள்ளார்.

சீயோன் மற்றும் ஆல்வின் குழுமப் பள்ளிகளின் தலைவர் டாக்டர் என்.விஜயன் மற்றும் பள்ளி முதல்வர்கள் வெற்றி பெற்ற அனைத்து மாணவர்களையும் பள்ளியில் முதலிடம் பெற்ற மாணவ மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கிப் பாராட்டினர்.

## அமைச்சர் சாமிநாதன் திருப்பூர் குமரன் நினைவு மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒலி, ஒளி காட்சி அமைப்பினை துவக்கி வைத்தார்



திருப்பூர், மே.10-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தா. கிறிஸ்துராஜ் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் .க.செல்வராஜ் அவர்கள், மற்றும் மேயர் திரு.ந.தினேஷ்குமார் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் திருப்பூர் மாநகராட்சி, திருப்பூர் குமரன் நினைவு மண்டபத்தில் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஒலி, ஒளி காட்சி அமைப்பினை துவக்கி வைத்து பார்வையிட்டார்கள்.

விண்ணில் பறக்கும் கொடி மண்ணில் வீழ்வதா என தன்னுயிர் கொடுத்து நாட்டின் மானம் காத்த இந்திய விடுதலை வரலாற்றில் தனிப்பெருமை வாய்ந்த திருப்பூர் குமரன் நினைவாக இரயில் நிலையம் எதிரில் திருப்பூர் குமரன் நினைவகம் 11,195 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ளது. திருப்பூர் குமரன் நினைவு மண்டபத்தில் சுதந்திர போராட்ட வீரர் வாஞ்சிநாதன் அவர்கள் நினைவு நாளான (17.06.2022) அன்று அவரது நினைவை போற்றும் வகையில் திருப்பூர் சுதந்திரப் போராட்ட வீரர்களின் புகைப்படக்கண்காட்சி திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், திருப்பூர் மாவட்ட தமிழறிஞர்கள் புகைப்படக் கண்காட்சி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் குமரன் நினைவு மண்டபத்தில் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயனிகள் திருப்பூர் மாவட்ட சுதந்திர போராட்ட தியாகிகளை பற்றி அறிந்து கொள்ள ஏதுவாக புகைப்படங்கள் வைக்கப்பட்டுள்ளது. மாணவ, மாணவியர்கள் போட்டித் தேர்வில் படிக்கும் வண்ணம் பல்வேறு துறைகளை சார்ந்த புத்தகங்கள் அரங்கில் வைக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து இன்றைய தினம் மாண தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் திருப்பூர் குமரன் வாழ்க்கை வரலாற்றை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் திருப்பூர் குமரன் நினைவு மண்டபத்தில் ரூ.6.00 இலட்சம் அமைக்கப்பட்டுள்ள ஒலி, ஒளி காட்சி அமைப்பினை துவக்கி வைத்து பார்வையிட்டார்கள். இந்நிகழ்ச்சியில், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் .சதீஸ்குமார், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) .மனோஜ் குமார் மற்றும் துறை சாரந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.



■ கன்னியாகுமரி மாவட்டம், குருந்தன்கோடு பகுதியில் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.

## உத்தமபாளையம் வட்டம், பளியன்குடியில் மாவட்ட ஆட்சியாின் மக்கள் தொடர்பு திட்ட முகாம் 14.05.2025 அன்று நடைபெற உள்ளது

தேனி, மே.10-

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கம்பம் உள்வட்டம், மேலக்கூடலூர் (தெற்கு) வருவாய் கிராமம், பளியன்குடியில் வரும் 14.05.2025 புதன் கிழமையன்று காலை 10.00 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் மக்கள் தொடர்பு முகாம் நடைபெற உள்ளது.

உத்தமபாளையம் வட்டத்தைச் சேர்ந்த பொதுமக்கள், தங்களது கோரிக்கை தொடர்பான மனுக்களை (பட்டா மாறுதல், முதியோர் உதவித்தொகை கோருதல், புதிய குடும்ப அட்டை கோருதல், ஆதி திராவிடர் நலத்துறை, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, விபத்து நிவாரணம், விவசாயத்துறை, போக்குவரத்துத்துறை மற்றும் இதர துறைகள்) வரும் 14.05.2025 அன்று பளியன்குடியில் நடைபெறும் மக்கள் தொடர்பு திட்ட முகாமில் நேரில் மனுவினைக் கொடுத்து பயன்பெற்றுக் கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தெரிவித்துள்ளார்கள்.

## மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் செய்தி குறிப்பில் தெரிவித்ததாவது




இராமநாதபுரம், மே.10-

இராமநாதபுரம் மாவட்டத்தில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழ் இயங்கும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் சார்பாக தேசிய செயல் திட்டம் போதைப்பொருள் ஒழிப்பு NAPDDR) கீழ் Nasha Mukth Bharath Abhiyaan (NMBA) போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வு செய்தல் திட்டம் செயல்படுத்த ரூ. 10.00 இலட்சம் (பத்து இலட்சம்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, இராமநாதபுரம் மாவட்டத்தில் யேளாய ஆரமவா Nasha Mukth Bharath Abhiyaan (NMBA) திட்டத்தின் கீழ் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வு செய்தல் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள், பல்கலைக் கழக வளாகம் மற்றும் பள்ளிகள் ஆகியவற்றில் போதைப்பொருள் தடுப்பது குறித்த விழிப்புணர்வு மற்றும் குழந்தைகள், இளைஞர்கள், இளம் பருவத்தினர் மற்றும் பெரியவர்களைத்; தாக்கும் போதைப்பொருள்கள் பயன்பாட்டை தடுத்தல், சமூகத்தில் அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான திட்டங்களை செயல்படுத்த தகுதியான தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடமிருந்து கருத்துருக்கள் வரவேற்கப்படுகிறது.

தகுதி வாய்ந்த தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தங்களது கருத்துருக்களை 16.05.2025 (வெள்ளிக்கிழமை) மாலை 5 மணிக்குள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, மாவட்ட ஆட்சியர் வளாகம், நீதிமன்றம் தென்புறம் இராமநாதபுரம் 623504 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.





## மானாமதுரையின் சித்திரை திருவிழா நிரந்தர நாடக மேடை அமைக்காதது ஏன்?

மானாமதுரை, மே. 10-

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தான நிர்வாகத்துக்குட்பட்ட மானாமதுரை வைகை நதியின் மேற்கு கரையின் ஓரத்தில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது 2000 ஆண்டுகள் பழமையான பத்தாம் நூற்றாண்டை சேர்ந்த அருள்மிகு ஆனந்தவல்லி அம்மன் அருள்மிகு சோமநாதர் ஆலயம் உள்ளது இக்கோயிலானது தீராத நோய்களை தீர்க்கும் தலமாகவும், பக்தர்களுக்கு வேண்டும் வரம் தரும் தலமாகவும் திகழ்ந்து வருகின்றது. மானாமதுரை அருள்மிகு ஆனந்தவல்லி, அருள்மிகு சோமநாதர் கோயில் சித்திரை திருவிழா கடந்த மே1 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. தொடர்ந்து 10 நாள்கள் திருவிழா நடைபெறுகிறது. விழா நாள்களில் தினமும் இரவு ஆனந்தவல்லி அம்மனும் சோமநாதர் சுவாமியும் சர்வ அலங்காரத்தில் வெவ்வேறு வாகனங்களில் மண்டகப்படிகளில் எழுந்தருளி அருள்பாலித்து வீதியுலா வருதல் நடைபெறுவது வழக்கம் ஆகும்.

ஒவ்வொரு மண்டகப் படி தாரர்கள் மக்களை மகிழ்விக்கும்படி கலைநிகழ்ச்சிகள் நாடகங்கள் நடத்தி வருகின்றனர் குடும்பத்தினருடன் அமர்ந்து பார்ப்பதற்கு ஏதுவான சூழ்நிலை இல்லை மேலும் நாடக கலைஞர்கள் உடை மாற்றும் ஓய்வெடுக்கும் போன்ற அறை இல்லாததால் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். இத்தனை வருடங்கள் கடந்தும் நிரந்தர நாடக மேடை இல்லை என்பது பெரும் சர்ச்சையாக உள்ளது. எத்தனையோ அரசியல் கட்சிகள் ஆளுமை செய்த இவ்விடத்தில் நாடக மேடை அமைக்காதது ஏன் என்ற கேள்வி எழுந்துள்ளது. இதற்குப் பின்னர் ஆவது நிரந்தர நாடக மேடை அமைக்க ப்படுமா எதிர் பார்ப்பில் பொதுமக்கள் உள்ளனர்.





## வேலூரில், முன்னாள் எம்.பி. மார்கபந்து இல்லத் திருமண விழா

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள், அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்கள் வேலூர் எம்.பி. ஆகியோர் பங்கேற்பு

வேலூர், மே.10-

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு பகுதியை சேர்ந்தவர் மறைந்த வழக்கறிஞர் மார்கபந்து எம்.பி யாக இருந்தவர். இவரின் மகன் டாக்டர். அருளரசு வேலூர் அரசு பொறியியல் கல்லூரியில் முதல்வராக பணியாற்றி ஓய்வுபெற்றவர் ஆவர். சென்னை கிண்டியில் உள்ள தொழிற்நுட்ப கல்லூரியில் தேர்வு கட்டுப்பாட்டு உதவி இயக்கு நராக பணிபுரிந்தவர். இவரின் மகன் (மருத்துவர்) திருமண வரவேற்பு நிகழ்ச்சி வேலூர் அடுத்த அரப்பா க்கத்தில் உள்ள மண்டபத்தில் பிரம்மாண்டமான முறையில் நடைபெற்றது.

இவ்விழாவில் லோக் ஆயுத்தா சேர்மன் நீதிபதி ராஜமாணிக்கம், தமிழக அமைச்சர் பன்னீர் செல்லம். நீதிபதிகள் கோவிந் தராஜன், திலகவதி, நக்கீரன், டீக்காராமன், சாம்பசிவம், சிவஞானம், திருமகள், முருகன், வி.ஐ.டி வேந்தர் விசுவநாதன், துணைத் தலைவர் சங்கர், சேகர், வேலூர் நரூவி மருத்துவமனை தலைவர் சம்பத். வேலூர் எம்.பி. கதிர் ஆனந்த், முன்னாள் அமைச்சர்கள் செம்மலை, விஜய், செந்தில் செல்வன், என்.டி.சண்முகம் (மத்திய) ஞானசேகரன், சேகர் (எம்.பி) உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் நேரில் வந்து வாழ்த்தினர். சிறப்பு விருந்தினர்கள் அனைவரையும் டாக்டர். அருளரசு பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161